# மீகஹகிவுல பிரதேச சபை
# பதுளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 08 ஆந் திகதிவரையும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 நவம்பர் 02 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடுகள் மற்றும் செயலாற்றல் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2012 மார்ச் 31 ஆந் திகதி வரையில் 15 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிராததுடன் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்களின் காலப்பகுப்பாய்வு கீழே காட்டப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 03 மாதம் தொடக்கம் 01 வருடம் வரை | - | 08 |
| 01 வருடம் தொடக்கம் 02 வருடம் வரை | - | 07 |
| | | 15 |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 வங்கிக் கணக்குகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 395(ஈ) இன் நியதிகளின் பிரகாரம் சபைக்குரிய நடைமுறைக் கணக்குகளுக்காக 2011 சனவரி மாதம் தொடக்கம் வங்கிக் கணக்கிணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 வருமான நிருவாகம்

**மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் மீளாய்வாண்டிற்குரிய மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செயற்பாடற்ற சொத்துக்கள்

2002 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட ஏற்பாட்டின் கீழ் ரூபா 533,100 செலவிடப்பட்டு டொலமைட் உற்பத்தி செயற்திட்டத்திற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தில் அச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்டமையினால் 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையும் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2011 சனவரி 06 ஆந் திகதி சபை கலைக்கப்பட்டிருந்ததுடன் தலைவருக்கு 2011 சனவரி மாதப் படியாக ரூபா 10,000 உம், தொலைபேசி மற்றும் எரிபொருள் கொடுப்பனவின் ஒரு பகுதியாக ரூபா 17,648 தொகையும் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்படடிருந்தன.

## 2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) 2008 ஆம் ஆண்டில் உபமான பாதக்க முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டு மீகஹகிவுல ஜாதிக சவிய கமநெகும செயற்பாட்டு அலவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 380,550 பெறுமதியான உபகரணங்கள் உரிய செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு செயற்திட்ட அலுவலகம் மூடப்பட்டதன் பின்னர் மீள சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அவசர கடமைகளுக்காக இராணுவத்திற்குக் கையளிக்கப்பட்ட சபைக்குச் சொந்தமான கெப் வாகனத்தை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு இராணுவத்தினால் அவ்வப்போது சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதனை சபையினால் பெற்று பழுதுபார்க்கப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது பொருத்தமான வகையில் விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) விபத்துக்குள்ளாகி 2008 யூன் 13 தொடக்கம் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த உழவு இயந்திரத்தை பழுதுபார்த்து கழிவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்குரிய ஒரு உழவு இயந்திரம் 2011 மே மாதம் தொடக்கம் பல்வேறு தரப்பினர்களுக்கு நாளாந்த கட்டண அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த எநத சந்தர்ப்பங்களிலும் முறையாக வழங்கப்பட்டமைக்கு எதுவித எழுத்து மூல சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2005 மே 05 ஆந் திகதிய சீஎல்ஜீ/1/பி.சபை வாகனம் சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்ட எல்லையினை விஞ்சி சபையின் கெப் வாகனத்திற்காக 479 லீற்றர் டீசலுக்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 39,044 தொகை செலவிடப்பட்டிருந்தது.